



## கலைஞர் – அண்ணா வழியில் முதலமைச்சரின் சீரிய தலைமையில்

# சிறுபான்மையின மக்களுக்கு பாதுகாப்பு அரணாக நம்முடைய ‘திராவிட மாடல்’ அரசு விளங்கி வருகிறது!

## சென்னை ஆர்.கே.நகரில் நடைபெற்ற கிறிஸ்துமஸ் விழாவில்

## துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேச்சு!



சென்னை, டிச. 25 -

**சென்னை ஆர்.கே.நகர் சட்டமன்றத் தொகுதியில் கழகத்தின் சார்பில் ஏற்பாடு செய்யப்பட்ட கிறிஸ்துமஸ் விழாவில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பங்கேற்று பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கி வாழ்த்திப் பேசினார்.**

**அப்போது அவர், ``இன்று தமிழ்நாட்டில் கலைஞர் மற்றும் பேரறிஞர் அண்ணா வழியில் நம் முதலமைச்சர் அவர்கள் சிறப்பான, குறிப்பாக சிறுபான்மையின மக்களுக்குப் பாதுகாப்பான ஆட்சியை வழங்கி வருகிறார். சிறுபான்மையின மக்களுக்கு பாதுகாப்பு அரணாக நம்முடைய திராவிட மாடல் அரசு விளங்கி வருகிறது” என்று குறிப்பிட்டார்.**

**துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:**

சென்னை வடக்கு மாவட்டக் கழகத்தின் சார்பாக, இன்றைக்கு ஆர்.கே. நகர் சட்டமன்றத் தொகுதியில் நடைபெறுகின்ற இந்தச் சிறப்புக்குரிய கிறிஸ்துமஸ் விழாவில் கலந்துகொண்டு உங்களையெல்லாம் சந்திப்பதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். முதலில், வந்திருக்கக் கூடிய அனைவருக்கும் என் இனிய கிறிஸ்துமஸ் தின வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். மெர்ரி கிறிஸ்துமஸ் டூ ஆல் (*Merry Christmas to all*).

இந்த நிகழ்ச்சிக்கு என்னை அழைத்து, இதை இவ்வளவு சிறப்பாக நடத்திக் கொண்டிருக்கக் கூடிய உங்களின் சட்டமன்ற உறுப்பினர், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் அருமைச் சகோதரர் எபினேசர் அவர்களுக்கும், மாவட்டப் பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் அவர்களுக்கும் மீண்டும் என்னுடைய பாராட்டுகளையும், வாழ்த்துகளையும், நன்றியையும் உங்கள் சார்பாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

### மனிதநேயம், இரக்கம் மற்றும் சமத்துவம்

இது ஏதோ முதன்முறையாக நடைபெறுகின்ற நிகழ்ச்சி கிடையாது; இது ஆண்டுதோறும் தவறாமல் நடக்கக்கூடிய ஒரு நல்ல நிகழ்ச்சி. இன்றைக்கு இந்த நிகழ்ச்சியில் கிட்டத்தட்ட 2,200 பேருக்கு கிறிஸ்துமஸ் நலத்திட்ட உதவிகளை இவ்வளவு சிறப்பாக ஏற்பாடு செய்திருக்கிறார் உங்களின் சட்டமன்ற உறுப்பினர்.

இயேசு என்றாலே நமக்கு முதலில் நினைவுக்கு வருவது அவரின் மனிதநேயம், இரக்கம் மற்றும் சமத்துவம். அனைவருக்கும், குறிப்பாக எளியவர்களுக்கு உடனடியாக உதவுவது. இதை ஏன் சொல்கிறேன் என்றால், கிறிஸ்தவக் கொள்கைகளுக்கும் நம் திராவிடக் கொள்கைகளுக்கும் மிகப் பெரிய வித்தியாசம் கிடையாது. எனவே, திராவிட முன்னேற்றக் கழகத்தின் துணை முதலமைச்சராக மட்டுமல்லாமல், திராவிட முன்னேற்றக் கழகத்தின் இளைஞர் அணிச் செயலாளராக, ஒரு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் நடத்துகின்ற இந்த நிகழ்ச்சியில் கலந்துகொள்வது எனக்குக் கூடுதல் மகிழ்ச்சி. அதற்கு எபினேசர் அவர்களுக்கு என்னுடைய கூடுதல் நன்றிகள்.

### எல்லோருக்கும் எல்லாம்

இன்று நம்முடைய மாநிலத்தில் திராவிட மாடல் அரசு அமைந்து, நம் முதலமைச்சர் அவர்கள் கடந்த நான்கரை ஆண்டுகளில் `எல்லோருக்கும் எல்லாம்' என்கின்ற ஓர் அரசைத் தொடர்ந்து நடத்தி வருகிறார். அதில் சில திட்டங்களை மட்டும் உங்களுக்கு நினைவுபடுத்த நான் விரும்புகிறேன்.

முதலமைச்சராகப் பொறுப்பேற்ற முதல் நாள் நம் முதலமைச்சர் இட்ட முதல் கையெழுத்து, இங்கே வந்திருக்கக்கூடிய மகளிருக்கான ‘விடியல் பயணத் திட்டம்’ - அதாவது, கட்டணமில்லாப் பேருந்துத் திட்டம். அதைத் தொடர்ந்து, குழந்தைகள் பள்ளிக்கூடத்துக்கு வந்து படிக்க வேண்டும், கல்வி மிக மிக முக்கியம் என்று கருதி முதலமைச்சர், `காலை உணவுத் திட்டத்துக்கு’ கையெழுத்திட்டார். இன்று `முதலமைச்சர் காலை உணவுத் திட்டத்’தில் ஒவ்வொரு நாளும், அரசுப் பள்ளியில் ஒன்றாம் வகுப்பிலிருந்து ஐந்தாம் வகுப்பு வரை படிக்கக் கூடிய 22 லட்சம் குழந்தைகள் பயனடைந்து வருகிறார்கள்.

### பல்வேறு நலத்திட்டங்கள்

பள்ளிக்கூடம் சென்று கல்வி கற்றால் மட்டும் போதாது, அதற்கு மேல் படிக்க வேண்டும், கல்லூரிப் படிப்பு முக்கியம் என்று கருதி, அரசுப் பள்ளியில் படித்து எந்தக் கல்லூரியில் சேர்ந்து பயின்றாலும் அவர்களுக்குக் கல்வி ஊக்கத்தொகையாக `புதுமைப்பெண்’ மற்றும் `தமிழ்ப்புதல்வன்’ ஆகிய திட்டங்களின் கீழ் மாதம் 1,000 ரூபாய் கல்வி ஊக்கத்தொகையை அந்த மாணவர்களின் வங்கிக் கணக்குக்கு முதலமைச்சர் அவர்கள் வழங்கி வருகின்றார்.

இப்படி `நம்மை காக்கும் 48’, `இல்லம் தேடிக் கல்வி’, `மக்களைத் தேடி மருத்துவம்’ எனப் பல்வேறு திட்டங்களை ஒவ்வொரு நாளும் முதலமைச்சர் அவர்கள் செயல்படுத்தி வருகிறார். இதற்கெல்லாம் மகுடம் சூட்டுவது போன்ற ஒரு திட்டம்தான் `கலைஞர் மகளிர் உரிமைத் தொகை’ திட்டம். இன்றைக்கு, தமிழ்நாடு முழுவதும் இருக்கக்கூடிய ஒரு கோடியே 30 லட்சம் மகளிருக்கு மாதம் 1,000 ரூபாய் மகளிர் உரிமைத் தொகையாக நம் முதலமைச்சர் அவர்கள் வழங்கி வருகிறார்.

அதுமட்டுமல்லாமல், சிறுபான்மையின மக்களுக்கு ஏராளமான திட்டங்களை நம் முதலமைச்சர் அவர்கள் செயல்படுத்தி வருகிறார். அவற்றில் சிலவற்றை மட்டும் இங்கே நினைவுபடுத்த விரும்புகின்றேன்.

### கல்வி ஊக்கத்தொகை

சிறுபான்மையின மாணவர்களுக்குக் கல்வி ஊக்கத்தொகையாக ஒவ்வோர் ஆண்டும் 7 கோடி ரூபாயை முதலமைச்சர் வழங்கி வருகிறார். கிறிஸ்துவ மகளிர் உதவும் சங்கங்களுக்கு மானியமாக 13 கோடி ரூபாயை ஒதுக்கியிருக்கிறார். ஜெருசலேத்துக்குப் புனித பயணம் மேற்கொள்வோருக்கு மானியமாக 38 ஆயிரம் ரூபாய் ஒதுக்குகிறது நம்முடைய அரசு. தேவாலயங்களைப் புதுப்பிப்பதற்காக இதுவரை 5 கோடி ரூபாயை நம்முடைய அரசு ஒதுக்கியிருக்கிறது.

சிறுபான்மையினர் நடத்துகின்ற கல்வி நிறுவனங்களுக்கு நிரந்தர அங்கீகாரம் எனப் பல்வேறு திட்டங்களை நம்முடைய அரசு செய்துள்ளது. நேற்று முன்தினம் திருநெல்வேலியில் நடந்த கிறிஸ்துமஸ் நிகழ்ச்சியில் கலந்துகொண்ட முதலமைச்சர் அவர்கள், அங்குள்ள பாதிரியார்கள் வைத்த கோரிக்கையை ஏற்று ஓர் அறிவிப்பை வெளியிட்டார். அதன்படி, சிறுபான்மைக் கல்வி நிறுவனங்களில் உள்ள ஆசிரியர் தேர்வுக் குழுவில், அந்தந்த நிறுவனங்களின் பிரதிநிதிகளே ஆசிரியர்களைத் தேர்வு செய்யலாம் என்கிற சிறந்த அறிவிப்பை உடனடியாக வெளியிட்டார்.

இன்று இந்த ஆர்.கே. நகர் பகுதிக்குப் பல்வேறு திட்டங்களை முதலமைச்சர் அவர்கள் தந்திருக்கிறார்கள். 8,000 கோடி ரூபாய் அளவில் செயல்படுத்தப்படுகின்ற ‘வட சென்னை வளர்ச்சித் திட்டத்தின்’ கீழ் இந்தப் பகுதியிலும் ஏராளமான பணிகள் நடைபெறுகின்றன. எழில் நகரில் 110 கோடி ரூபாய் அளவில் மேம்பாலங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

### நவீன வசதிகளுடன் உருமாற்றம்

13 எம்.எல்.டி கொள்ளளவு கொண்ட நீரேற்று நிலையம் 20 கோடி ரூபாயில் அமைக்கப்பட்டு வருகிறது. சுண்ணாம்பு கால்வாயில் 20 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஒரு புதிய விளையாட்டுத் திடல் கட்டப்பட்டு வருகிறது. தண்டையார்பேட்டை பேருந்து நிலையம் சுமார் 23 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நவீன வசதிகளோடு உருமாற்றம் செய்யப்பட்டுப் புதிதாகக் கட்டப்பட்டு வருகிறது.

ஏ.இ.கோயில் பகுதியிலும் 20 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய விளையாட்டுத் திடல் கட்டப்பட்டு வருகிறது. முக்கியமாக உங்கள் அனைவருக்கும் பயன்படுகின்ற வகையில், உங்களுடைய தொகுதியில் மட்டும் புதிதாக 36 நியாய விலைக் கடைகள் அமைக்கப்பட்டு வருகின்றன. இப்படி இந்த ஆர்.கே. நகர் தொகுதிக்கு நம் சட்டமன்ற உறுப்பினர் எபினேசர் அவர்கள் ஒவ்வொன்றையும் பார்த்துப் பார்த்துச் செய்துகொண்டிருக்கிறார்.

நம் முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாட்டின் ஒவ்வொரு தொகுதிக்கும் என்ன தேவை, ஒவ்வொரு மாவட்டத்திற்கும் என்ன தேவை என்று பார்த்துப் பார்த்துச் செய்துகொண்டிருக்கிறார். இப்படி நம் அரசும், முதலமைச்சர் அவர்களும் கொண்டு வரும் திட்டங்களால்தான் இன்று 11.19 சதவிகித பொருளாதார வளர்ச்சியோடு இந்தியாவிலேயே நம்பர் 1 மாநிலமாக நம்முடைய தமிழ்நாடு விளங்கிக் கொண்டிருக்கிறது.

ஆனால், இதையெல்லாம் பார்த்துதான் இன்று ஒன்றிய பா.ஜ.க அரசு நம்முடைய கழக அரசிற்கு, அதாவது தமிழ்நாட்டிற்கு - தமிழ்நாட்டு மக்களுக்குப் பல்வேறு வகைகளில் இடையூறுகள் கொடுத்துக் கொண்டிருக்கிறது. `புதிய கல்விக் கொள்கை’ என்று ஒன்றைக் கொண்டு வருகிறார்கள். இந்த புதிய கல்விக் கொள்கையை ஏற்றுக்கொண்டால் அதில் என்ன இருக்கிறது? மீண்டும் நாம் விரட்டியடித்த இந்தித் திணிப்பைத் தமிழ்நாட்டு மக்கள் மீது திணிக்க முயற்சிக்கிறார்கள். மீண்டும் சமஸ்கிருதத்தை நம் மீது திணிக்க முயற்சிக்கிறார்கள். மீண்டும் குலக்கல்வித் திட்டத்தைத் தமிழ்நாட்டு மக்கள் மீது திணிக்க முயற்சிக்கிறார்கள். இந்தத் திட்டத்தை அறிமுகப்படுத்தியபோது எதிர்த்த முதல் மாநிலம், இந்தியாவிலேயே தமிழ்நாடு; முதல் முதலமைச்சர் நம்முடைய முதலமைச்சர் அவர்கள்தான். மற்ற மாநிலங்கள் எல்லாம் ஏற்றுக்கொண்டன.

> **“வெல்வோம் இருநூறு, படைப்போம் வரலாறு” என்று 200 தொகுதிகளை இலக்காகத் தலைவர் அவர்கள் சொல்லியிருக்கிறார். 200 மட்டுமல்ல, அதற்கும் அதிகமான தொகுதிகளில் நம்முடைய மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி வெற்றி பெற்றுக் காட்ட வேண்டும். அதற்குத் தொடக்கமாக இந்த ஆர்.கே. நகர் தொகுதியில் மிகப்பெரிய வாக்கு வித்தியாசத்தில் வெற்றியை நீங்கள் உறுதி செய்ய வேண்டும்.**

### முன்னோடி முதலமைச்சர்

இன்று ஒன்றிய அரசு ஏதேனும் ஒரு திட்டத்தைக் கொண்டு வரும்போது, மற்ற மாநில முதலமைச்சர்கள் முதலில் பார்ப்பது தமிழ்நாட்டைத்தான். தமிழ்நாட்டு மக்கள் என்ன முடிவெடுக்கிறார்கள், தமிழ்நாட்டு முதலமைச்சர் என்ன முடிவெடுக்கிறார் என்பதே அந்தந்த மாநிலத்திற்கும் நல்லது என்று கருதுகிறார்கள். அந்த வகையில் இந்தியாவிலுள்ள மற்ற மாநில முதலமைச்சர்களுக்கெல்லாம் ந்ஒரு முன்னோடி முதலமைச்சராக நம்முடைய முதலமைச்சர் அவர்கள் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

அதுமட்டுமல்ல, இயேசுவின் வாழ்க்கையிலிருந்து நாம் கற்றுக்கொள்ள வேண்டிய மிக முக்கியமான விஷயம் ‘பகிர்ந்து அளித்தல்’. நம்மிடம் இருப்பதைப் பகிர்ந்து அனைவருக்கும் சமமாக வழங்குவது. ஆனால், ஒன்றிய அரசுக்குப் பிடிக்காத ஒரே வார்த்தை `பகிர்வு’. தமிழ்நாட்டிலிருந்து அதிக அளவில் நாம் வரி செலுத்துகிறோம், ஆனால் அந்த வரியைப் பகிர்ந்து கொடுக்கிறார்களா என்று பார்த்தால், அதுதான் இல்லை.

தமிழ்நாட்டிற்கு எந்தெந்த வகையிலெல்லாம் தொல்லை கொடுக்க முடியும், இடையூறுகள் செய்ய முடியும் என்று பார்த்து ஒவ்வொரு நாளும் நம்முடைய நிதியைப் பகிர்ந்து கொடுக்க ஒன்றிய அரசு தவிர்க்கிறது. திராவிட மாடல் அரசுக்கு இருக்கக்கூடிய உங்களுடைய ஆதரவு மற்றும் மக்கள் செல்வாக்கைப் பார்க்கும்போது, ஒன்றிய அரசுக்குக் கோபம் வருகிறது.

‘தொகுதி மறுவரையறை’ கொண்டு வருகிறார்கள்; 39 தொகுதிகளை எப்படியாவது குறைக்க வேண்டும், மாநில உரிமைகளைப் பறிக்க வேண்டும் என்று செயல்படுகிறார்கள்.

அண்மையில் வாக்காளர் பட்டியல் திருத்தப் பணிகளைச் செயல்படுத்தினார்கள். இந்தத் திட்டம் வரும்போதே நம்முடைய தலைவர், முதலமைச்சர் சொன்னார். ``இவ்வளவு குறுகிய காலத்தில் இதனைச் செய்ய முடியாது” என்று.

பீகார் மாநிலத்தில் பல லட்சக்கணக்கான வாக்குகளை நீக்கியிருக்கிறார்கள். குறிப்பாக, இஸ்லாமியர்கள், சிறுபான்மையினர் மற்றும் கிறிஸ்தவர்களின் வாக்குகளை நீக்கியிருக்கிறார்கள். பிற்படுத்தப்பட்டோரின் வாக்குகளை நீக்கியிருக்கிறார்கள். நீங்கள் என்ன செய்தாலும், சிறுபான்மையினரின் வாக்கு மற்றும் கிறிஸ்தவர்களின் வாக்கு பா.ஜ.க-விற்கு விழாது என்று தெரிந்தே அவர்களின் வாக்குகளை நீக்குகிறீர்கள். இன்று அது நடந்திருக்கிறது. இரண்டு நாட்களுக்கு முன்பு அந்த வரைவுப் பட்டியலை வெளியிட்டார்கள். தமிழ்நாடு முழுவதும் கிட்டத்தட்ட 97 லட்சம் வாக்குகளை நீக்கியிருக்கிறார்கள். சென்னையில் மட்டும் 14 லட்சம் வாக்குகள் நீக்கப்பட்டுள்ளன.

### சரிபார்த்துக் கொள்ளுங்கள்

இங்கு வந்திருக்கக்கூடிய கிறிஸ்தவப் பெருமக்கள், உங்களிடத்தில் நான் உரிமையோடு கேட்டுக்கொள்வது ஒன்றுதான். நீங்கள் அனைவரும் உங்களுடைய வாக்குகள் சரியாக உள்ளனவா என்பதை முதலில் சரிபார்த்துக் கொள்ளுங்கள். ஏனெனில், வாக்கு என்பது உங்களின் கடமை மட்டுமல்ல, அது உங்கள் ஒவ்வொருவரின் உரிமை. ஒருவேளை பெயர் விடுபட்டிருந்தால் நம்முடைய கழகத்தின் பி.எல்.ஏ-2 பிரிவைச் சந்தித்து படிவம் 6 கொடுத்து மீண்டும் விண்ணப்பியுங்கள். ஜனவரி 18-ஆம் தேதி வரை நமக்குக் கால அவகாசம் இருக்கிறது.

இன்று இவ்வளவு சூழ்ச்சிகளைச் செய்துவிட்டு ஒன்றிய உள்துறை அமைச்சர் குஜராத்திலிருந்து, தமிழ்நாட்டிற்குச் சவால் விடுகிறார். ``நாங்கள் பீகாரில் வெற்றி பெற்றுவிட்டோம், எங்களது அடுத்த இலக்கு தமிழ்நாடு” என்று ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித்ஷா அவர்கள் கூறுகிறார். ``தயாராக இருங்கள்” என்று தமிழ்நாட்டைப் பார்த்துச் சவால் விடுகிறார். உங்களின் உருட்டல் மிரட்டல்களுக்கெல்லாம் இங்குள்ள அடிமைக் கூட்டம் பயப்படுமே தவிர, தமிழ்நாட்டு மக்களும் கலைஞரின் உடன்பிறப்புகளும் எந்நாளும் பயப்பட மாட்டார்கள்.

### தமிழ்நாட்டின் பெருமை

பீகாரிலோ, உத்தரப் பிரதேசத்திலோ, மத்தியப் பிரதேசத்திலோ நீங்கள் வெற்றி பெறலாம். ஆனால் உங்களுடைய பருப்பு என்றைக்குமே தமிழ்நாட்டில் வேகவே வேகாது. ஏனெனில் தமிழ்நாட்டிற்கு என்று ஒரு தனி அடையாளம், தனித்துவம் இருக்கிறது.

நாங்கள் கிறிஸ்துமஸ் அன்று கேக் வெட்டி, இஸ்லாமியர்களுக்குக் கொடுப்போம். ரம்ஜான் அன்று எங்களுடைய வீட்டிற்குப் பிரியாணி வரவில்லை என்றால், உரிமையோடு கேட்போம். பொங்கல் அன்று தமிழ்நாட்டு மக்கள் அனைவரும் இணைந்து சமமாகப் பொங்கலைக் கொண்டாடுவோம். இதுதான் தமிழ்நாட்டின் பெருமை.

இன்று சங்கிகள் தமிழ்நாட்டுக்கு இவ்வளவு பிரச்சினைகளைச் செய்து கொண்டிருக்கிறார்கள். அவர்களோடு யார் கூட்டணி வைத்திருக்கிறார்கள் என்பது உங்களுக்கே தெரியும். பழைய அடிமைகளோடு சேர்த்து இன்று புதிய அடிமைகளும் சேர்வார்களா என்று அவர்கள் காத்துக் கொண்டிருக்கிறார்கள். நீங்கள் யாரோடு வேண்டுமானாலும் கூட்டணி வைத்துக்கொள்ளுங்கள், நாங்கள் தமிழ்நாட்டு மக்களோடும் `வெற்றிக் கூட்டணி’யோடும் இருக்கிறோம். எங்களது தலைவர் `மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி’யை அமைத்திருக்கிறார்.

இது வெறும் தேர்தலுக்காக அமைக்கப்பட்ட கூட்டணி கிடையாது. இது ஒரு கொள்கைக் கூட்டணி. அதனால்தான் கடந்த 11 தேர்தல்களாக தமிழ்நாட்டு மக்கள் வெற்றியை மட்டுமே நம்முடைய தலைவருக்கு, திராவிட முன்னேற்றக் கழகத்திற்குத் தொடர்ந்து வழங்கிக் கொண்டிருக்கிறார்கள்.

இன்று அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் என்பது, அமித்ஷா திராவிட முன்னேற்றக் கழகமாக மாறிவிட்டது. இன்று தமிழ்நாட்டில் டாக்டர் கலைஞர் மற்றும் பேரறிஞர் அண்ணா வழியில் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் ஒரு சிறப்பான, குறிப்பாக சிறுபான்மையின மக்களுக்குப் பாதுகாப்பான ஆட்சியை வழங்கி வருகிறார். சிறுபான்மையின மக்களுக்கு ஓர் அரணாக நம்முடைய திராவிட மாடல் அரசு விளங்கி வருகிறது.

அப்படிப்பட்ட அந்தத் திராவிட மாடல் அரசு தொடர, நீங்கள் பாதுகாப்பாக இருப்பீர்கள் என்கிற நம்பிக்கையோடு, வருகின்ற 2026 சட்டமன்றத் தேர்தலில் ஒரு மிகப்பெரிய வெற்றியை நீங்கள் நம்முடைய மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக்கு வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

``வெல்வோம் இருநூறு, படைப்போம் வரலாறு” என்று 200 தொகுதிகளை இலக்காகத் தலைவர் அவர்கள் சொல்லியிருக்கிறார். 200 மட்டுமல்ல, அதற்கும் அதிகமான தொகுதிகளில் நம்முடைய மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி வெற்றி பெற்றுக் காட்ட வேண்டும். அதற்குத் தொடக்கமாக இந்த ஆர்.கே. நகர் தொகுதியில் மிகப்பெரிய வாக்கு வித்தியாசத்தில் வெற்றியை நீங்கள் உறுதி செய்ய வேண்டும்.

இந்தச் சிறப்பான வாய்ப்பை அளித்த மாவட்டப் பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் அவர்களுக்கும், என்னோடு கலந்துகொண்ட அமைச்சர் பி.கே.சேகர் பாபு அவர்களுக்கும், ஆவடி சா.மு.நாசர் அவர்களுக்கும், இந்த நிகழ்ச்சியைச் சிறப்பாக ஏற்பாடு செய்திருக்கக்கூடிய மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர், உங்களின் சட்டமன்ற உறுப்பினர் எபினேசர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்து, வந்திருக்கக்கூடிய அனைவருக்கும் மீண்டும் ஒருமுறை கிறிஸ்துமஸ் வாழ்த்துகளைத் தெரிவித்து விடைபெறுகின்றேன்.

இவ்வாறு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வாழ்த்திப் பேசினார்.

### பங்கேற்றவர்கள்

அமைச்சர்கள் பி.கே.சேகர்பாபு, ஆவடி சா.மு.நாசர், மாவட்டப் பொறுப்பாளர் ஆர்.டி.சேகர், சட்டமன்ற உறுப்பினர்கள் எபினேசர், ஐட்ரீம்ஸ் மூர்த்தி, தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் இளைய அருணா, மனோகர், கருணா, சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு மாநிலச் செயலாளர் மருத்துவர் ஜுபேர் கான், இளைஞர் அணி மாநிலத் துணைச் செயலாளர் எஸ்.ஜோயல், மாவட்டக் கழக நிர்வாகிகள் வெற்றிவீரன், நாகம்மை கருப்பையா, எஸ்.ஆர்.கமலகண்ணன், கோபி, மருது கணேஷ், லோகேஷ், பகுதிக் கழகச் செயலாளர்கள் லட்சுமணன், ஜெபதாஸ் பாண்டியன், சுரேஷ், செந்தில்குமார், ஜெயராமன், முருகன்,

பிஷப் டாக்டர் மோகன்தாஸ், வடசென்னை ஊழியர்கள் ஐக்கியத் தலைவர் மோசஸ், ஆர்.கே. நகர் ஊழியர் ஐக்கியத் தலைவர் பிஷப் பால்ராஜ், பாஸ்டர் டயபெட்ரா, அகில இந்திய கிறிஸ்தவ முன்னேற்றச் சங்கப் பொதுச்செயலாளர் டேவிட் லிவிங்ஸ்டன், மண்டலக் குழுத் தலைவர் நேதாஜி கணேசன், சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு உறுப்பினர் அப்துல் ரகுமான், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் பொன்.இளவரசன், சத்திய நாராயணன், லயோலா மதன், கட்பீஸ் சோமசுந்தரமூர்த்தி, ரவிக்குமார், வட்டக் கழகச் செயலாளர் கதிரேசன், மாமன்ற உறுப்பினர் தேவி கதிரேசன் உள்பட கழக முன்னணியினர் பலரும் கலந்து கொண்டனர்.